**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.66/2010**

2026—ம் ஆண்டு மார்ச் மாதம் 4ம் நாள் புதன்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3—ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**P.W.2 புவனேஸ்வரி, வயது 42, க/பெ கார்த்திக்**
**நேரம் - 3.05**
**குறுக்கு விசாரணை (பிரதிவாதிகள் 6,7,10 மற்றும் 11 தரப்பு)**

இவ்வழக்கை தாவா சொத்து எங்களுக்கு பாத்தியம் என்று வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். தாவா சொத்து பாகப்பிரிவினை அடிப்படையில் குப்புசாமி மற்றும் முனுசாமி ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அதில் 'அ' அட்டவணை சொத்து குப்புசாமிக்கும், 'ஆ' அட்டவணை சொத்து முனுசாமிக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தின் தேதி 09.03.1962 என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை ஏற்பட்ட சர்வே எண்.127/1 என்றால் சரிதான். பாகப்பிரிவினை மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர், அதில் குப்புசாமிக்கு 1 ஏக்கர், முனுசாமிக்கு 1 ஏக்கர் என்றால் சரிதான்.

2. அதேப்போல் முனுசாமி பாகத்தை அவர் அனுபவித்து வந்தார் என்றாலும், குப்புசாமி பாகத்தை அவர் 04.06.1962 அன்று கிருஷ்ணன் என்பவருக்கு எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். அதேப்போல் கிருஷ்ணன் அனுபவித்து வந்து 11.04.1964 அன்று பாக்கியம்மாள் என்பவருக்கு எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். அதேப்போல் பாக்கியம்மாள் சோமசுந்தரம் என்பவருக்கு 30.01.1966 அன்று எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். அதேப்போல் சோமசுந்தரம் அனுபவித்து வந்த பிறகு அவர் 23.08.2010 அன்று கணேசன் மற்றும் 4 பேருக்கு எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல, சோமசுந்தரம் மேற்படி இடத்தை அனுபவித்து வந்தது இல்லை. மேற்படி ஆவணத்தை எழுதி கொடுத்தது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

3. அதேப்போல் வருவாய் ஆவணமான பட்டா எண்.1369 மேற்படி 4 நபர்கள் துரைராஜ், சேகர், ஆத்மலிங்கம், தினேஷ்குமார் பெயரில் உள்ளது என்றால் சோமசுந்தரம் இறந்த பிறகு மேற்படி நபர்களே பட்டாவை அவர்கள் பெயருக்கு எங்களுக்கு தெரியாமல் மாற்றி

கொண்டார்கள். முனுசாமிக்கு பாகப்பிரிவினைப்படி 1 ஏக்கர் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அவருக்கு வடக்கு பக்கம் பாகப்பிரிவினை சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். தென் பகுதி குப்புசாமிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். என் தந்தை முனுசாமி குப்புசாமி, கிருஷ்ணன், பாக்கியம்மாள், சோமசுந்தரம் மற்றும் கிருஷ்ணனின் வாரிசுதாரர்கள் 4 பேர்கள் ஆகியோரிடம் கிரையம் ஆவணம் எழுதி வாங்கினாரா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. அதுப்போல் 1 ஏக்கர் மற்றும் ஆவணங்கள் பற்றி எனக்கு ஏதும் தெரியாது என்றால் சரிதான். எனக்கு என் தந்தையின் வடக்கு பக்கம் உள்ள சொத்தை பற்றிதான் தெரியும் என்றால் சரிதான்.

4. பாகப்பிரிவினை பத்திரத்தில் கிணறு 2 பாகம் குப்புசாமி மற்றும் முனுசாமிக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாகப்பிரிவினை பத்திரத்தில் மின் இணைப்பு பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான், என் தந்தை 1987 அன்று மின் இணைப்பை பெற்றார். போர்வெல் போடுவதற்காக என் தந்தை மின் இணைப்பை பெற்றார் என்றாலும், கிணறு 2 பாகம் 1 பாகத்தில்தான் பிரதிவாதிகள் பயிர் செய்து வருகிறார்கள் என்றால் குப்புசாமி இருக்கும் வரை 2 பாகமாக இருந்தது, அதன் பின்னிட்டு 1966ம் ஆண்டிலிருந்து 1 பாகமாகதான் இருந்து வருகிறது. மேற்படி விவரங்களை எனது தாவா வாதுரையில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். தாவாவில் நான் மேற்படி விவரங்களை பற்றி குறிப்பிடவில்லை என்றாலும், அதைப்பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சரிதான்.

5. போர்வெல் வடக்கு பக்கம்தான் போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையாளரை நியமித்து போர்வெல் வடக்கு பக்கம்தான் போடப்பட்டுள்ளது என்பதை நிரூபிக்க உள்ளதாகவும், நான் இவ்வழக்கிற்காக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.14ல் உள்ள சொத்து விவரத்தில் என் தந்தை முனுசாமி அனுசுயா அம்மாள் மகள், எம்.செல்வம் மகன் ஆகிய இருவருக்கும் பதிவு செய்யப்பட்ட உயிலை 02.09.2009 அன்று எழுதி வைத்தார் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.14ல் உள்ள சொத்து விவரத்தில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சாட்சி ஆவணத்தை படித்து பார்த்து விட்டு சர்வே எண்.127/1ல் ஹெக்டேர் 0.81.0 ஏக்கர் 2 இதில்

வடபுறம் பொதுவில் பாதி பாகம் ஹெக்டேர் 0.40.5(ஏக்கர் 1.00 செண்ட் ) இதுவும் மேற்படி சர்வே எண்ணில் உள்ள இறைப்பு கிணர் ஒன்றில் பொதுவில் பாதி பாகமும் என்று உள்ளது என்றால் சரிதான் என்று கூறினார்.

6. என் தந்தைக்கு பாத்தியப்பட்ட வடபுற சொத்திற்கு தான் உயில் எழுதி வைத்தார் என்றால் சரிதான். என் தந்தைக்கு என்ன பாகப்பிரிவினை மூலம் பாத்தியப்பட்ட சொத்தை ஆவணங்கள்படிதான் மற்றவர்களுக்கு எழுத முடியும் என்றால் சரிதான். என் தந்தை 10.03.2010ம் தேதி எனக்கும், என் தாய் மற்றும் சகோதரிக்கும் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் சரிதான். அதன் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **(வாதி வழக்கறிஞர் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது)** மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் 7வது பக்கத்தில் இறைப்பு கிணற்றில் பொதுவில் பாதி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் 2வது பக்கத்தில் உள்ள சங்கதிகளில் என் தந்தைக்கு பட்டா எண்.631 முன்னிலைக்கு மேற்படி சொத்து அவருக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டு கூறியுள்ளார் என்றால் சரிதான்.

7. தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்துவதற்கு முன்போ, அல்லது ஏற்படுத்தும் போதோ பிரதிவாதிகள் பெயரில்தான் பட்டா இருந்து வந்தது என்றால் சரியல்ல, 1966ம் ஆண்டிலிருந்து என் தந்தை பெயரில்தான் பட்டா, சிட்டா, அடங்கல் உள்ளது. மேற்படி சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் பட்டா எண்.631, சர்வே எண்.127/1 , லேட் சோமசுந்தரம் பெயர் உள்ளது என்றால் சரிதான், ஆனால் அவர் இறந்த பிறகுதான் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது. அந்த பட்டா **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 18.01.2010ம் வருட ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 சொத்து விவரத்தில் தென்புறம் பொதுவில் பாதி பாகம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. தாவா சொத்து எனக்கு பாத்தியமில்லை என்றாலும், பிரதிவாதிகளுக்குதான் பாத்தியப்பட்டது என்றாலும், சட்டத்திற்கு புறம்பாக என் தந்தை எங்களுக்கு எழுதி வைத்த தான

செட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என்றால் சரியல்ல. எனக்கு தற்போது என்ன வயது என்றால் 42 ஆகும், எனக்கு 1966ம் ஆண்டு என்ன வயது என்றால் அப்போது நான் பிறக்கவில்லை. பாக்கியம்மாள் சோமசுந்தரத்திற்கு 1966ம் வருடம் எழுதி வைக்கும் போதுதான் மேற்படி பிரச்சினைகள் ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் ஏற்பட்டதில் இருந்துதான் பிரச்சினை ஏற்பட்டது என்றால் பிரச்சினை எதுவும் இல்லை. சாட்சி அதன் பின்னிட்டு சரிதான் என்று கூறினார்.

9. மேற்படி குப்புசாமி, கிருஷ்ணன், பாக்கியம்மாள், சோமசுந்தரம், துரைராஜ் வகையறா இவர்களுக்குள் ஏற்பட்ட கிரைய ஆவணங்கள் செல்லாது என்று வழக்கு தாக்கல் செய்தேனா என்றாலும், வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. அதுப்போல் வழக்கு தாவா வாதுரையில் ஆவணங்கள் செல்லாது என்று குறிப்பிட்டு ஏதும் சொல்லவில்லை என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. அதுப்போல் தாவாவில் என்ன சங்கதிகள் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் தெரியாது. மேற்படி சொத்துக்கள் கிரையம் கொடுக்கும் போது நான் பிறக்கவில்லை என்றாலும், எதன் அடிப்படையில் எனக்கு தெரியும் என்றால் என் தந்தை சொல்லி தெரிய வந்தது.

10. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.3 வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் தெரியாது. தற்போது 2008ம் ஆண்டு மேற்படி வா.சா.ஆ.3 ஆவணம் தயார் செய்யவில்லை, கணினி மூலம்தான் வழங்கப்படுகிறது என்றால் அதுப் பற்றி தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் சிட்டா, அடங்கல் ஆவணத்தில் பிரதிவாதிகள் பெயர்கள் உள்ளது என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு எனக்கு அதைப் பற்றி தெரியாது என்று கூறினார். வா.சா.ஆ.4 மற்றும் 5 ஆவணங்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து விட்டு எனக்கு அதைப் பற்றி தெரியாது என்று கூறினார்.

11. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.7, 8, 9,10 ஆவணங்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும், மின்சார ரசீதாகும். வா.சா.ஆ.7, 8, 9,10 ஆவணங்களுக்கும்

பிரதிவாதிகளுக்கும் எந்த ஆட்சேபணையும் இல்லை என்றாலும், அவர்கள் கிரையம் பெற்ற பத்திரத்தில் மின் இணைப்பு பற்றி எந்த குறிப்பும் இல்லை என்றாலும் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.11, 12 ஆவணங்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.13 ஆவணத்தில் சொத்தின் அளவுகள் குறிப்பிடவில்லை என்றாலும், பட்டா எண்.631 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

12. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.17 அடங்கல் ஆவணத்தில், முனுசாமி, லேட் சோமசுந்தரம் என உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.17 ஆவணத்தில் பிரதிவாதிகள் பெயரில் கூட்டாக உள்ளது என்று காணப்படுகிறது என்றால் சோமசுந்தரத்திற்கே அனுபவம் இல்லை, அவர் இறந்த பிறகு அவர் பெயரை சேர்த்துள்ளார்கள். ஆகையால் என்னுடைய வா.சா.ஆ.17 ஆவணத்தில் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பதால் தெற்கு பக்கம் பிரதிவாதிகளுக்கு சொந்தம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.19 ஆவணத்தில் பட்டா முனுசாமி பெயரில் உள்ளது என்று கொடுத்துள்ளது தவறு என்றால் சரியல்ல.

13. வா.சா.ஆ.20, 21, 22 ஆவணங்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.23 ஆவணத்தை பற்றி எனக்கு நேரிடையாக தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.24, 25, 26, 27, 28, 29, 30 ஆவணங்களுக்கும், பிரதிவாதிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.31 புகார் அளித்ததற்கான அஞ்சல் ரசீது, ஒப்புகை அட்டையோ தாக்கல் செய்யாததால் மேற்படி ஆவணம் ஏற்புடையதல்ல என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.33 ஆவணமான மாவட்ட ஆட்சியரின் கடிதத்தில் 2010ம் ஆண்டு என் தந்தை ஆணையர் வைத்து நிலத்தை அளக்க ஆட்சேபணை தெரிவித்தார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

14. வா.சா.ஆ.35, 36, 37, 38, 39 ஆகிய ஆவணங்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. வா.சா.ஆ.40, 41, 42, 43 ஆகிய ஆவணங்கள் வழக்கை எதிரிகள் மீது தாக்கல் செய்வதற்காக உருவாக்கப்பட்ட பொய்யான ஆவணங்கள் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. செல்வம் யார் என்றால் என் அண்ணன் ஆவார். அவர் சொத்தை உட்பிரிவு செய்ய வா.சா.ஆ.44 முதல் 50 வரையான ஆவணங்களான மனுக்கள் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.51 ஆவணம் வழக்கிற்கு சம்மந்தம் இல்லாதது என்றால் பக்கத்து நிலத்து ஜக்பந்தி உள்ளதால் என் தந்தை அனுபவித்து வந்ததை காண்பிக்க போடப்பட்ட ஆவணமாகும். சர்வே 127/1 என்றால் முனுசாமி நிலம் ஆகும்.

15. வா.சா.ஆ.52 முதல் 61 ஆவணங்கள் எதற்காக போடப்பட்டது என்றால் சர்வே 127/1 நிலத்திற்கு பக்கத்தில் உள்ள நிலங்களின் ஆவணங்கள் ஆகும், அது என் தந்தையின் அனுபவத்தில் உள்ளது என்பதை காண்பிக்க போடப்பட்ட ஆவணங்களாகும். மேற்படி சங்கதிகள் படி நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. என் தந்தை முனுசாமி, குப்புசாமி தென் புற நிலத்தை ஆவணங்கள் படி கிரையம் வாங்கினாரா என்றால் இல்லை. என் தந்தை தானசெட்டில்மெண்ட் எழுதியதும், குப்புசாமி நிலத்தை உயில் எழுதியதும் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் சோமசுந்தரம் முதலியார் கிரையம் பெற்ற ஆவணங்கள் அடிப்படையில் அவர் அனுபவித்து அவருக்கு பிறகு அவர்கள் வாரிசுகளிடம் 23.08.2010ல் கிரைய ஆவணங்கள் அடிப்படையில் சர்வே எண்.127/1 தென் பகுதி சட்டப்படியும், ஆவணங்கள் அடிப்படையிலும் கிரையம் பெற்றுள்ளார்கள், அவர்களுக்குதான் சொத்து பாத்தியம் என்றால் சரியல்ல.

16. இன்றளவிலும் பட்டா எண்.631 கூட்டு பட்டாவாக அண்ணன் செல்வம் மற்றும் பிரதிவாதிகள் 4 நபர்கள் பெயரிலும் உள்ளது என்றால் சரியல்ல. ஆகையால் தாவாவை

காலத்தின் தோஷங்கள் வகையில் சரியாக தாக்கல் செய்யப்படாததால் அதை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. துரைராஜ், சேகர், ஆத்மலிங்கம், தினேஷ்குமார் ஆகியோர் பெயரில் சர்வே எண்.127/1பி 1 ஏக்கர், ஹெக்டேர் 37.50 என்றும், பட்டா எண்.1369 மேற்படி பிரதிவாதிகள் 4 நபர்கள் பெயரில் இருந்து அவர்கள் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. பாக்கியம்மாள், சோமசுந்தரம் பெயரில் கிரையம் ஏற்பட்ட போது ஒப்பந்த அடிப்படையில் பிரச்சினை ஏற்பட்டது என்று கூறினேன், அப்போது எந்த ஒரு சட்ட அறிவிப்போ, வழக்கோ நான் தொடரவில்லை என்றாலும், தற்போது நான் அது குறித்து வழக்கு தொடர்வது காலத்தினால் ஏற்க கூடியது அல்ல என்பதால் தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

17. பிரதிவாதிகள் ஆவணங்கள் குறித்து எந்த ஒரு பரிகாரமும் கோராததால் தாவா சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றாலும், நீதிமன்ற கட்டணப்படி தாவா தாக்கல் செய்யாததால் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா பிரதிவாதிகள் சொத்தை அவர்கள் சொததான் தென் பகுதி 1 ஏக்கர் சொத்தை அனுபவித்து வரும் போது வாதி தாக்கல் செய்த வா.சா.ஆ.17 அடங்கல் படி அதில் கூட்டு பாத்தியம் உள்ளதால் பிரதிவாதிகள் அனுபவத்தில் உள்ள சுவாதீனத்தில் உள்ள சொத்தை உரிமை கோரி தாக்கல் செய்த தாவா சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது. மறு விசாரணை இல்லை.**
**நேரம் - 5.00**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
Arni